யில்லை. இப்பொழுது புது டாரிப் அமுலுக்கு வந்திருப்பதால் அதில் எவ்வளவோ கஷ்டங்கள் இருப்பதாக பல அங்கத்தினர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். பொதுவாக விவசாயிகளிடமிருந்தும் பல ஆலோசனைகள் வந்துகொண்டிருக்கின்றன. இந்த சபையிலேயே, இந்தக் கேள்வி நேரத்திலேயே ஒரு அங்கத்தினர் அவர்கள் சொல்வதைப் பார்த்தால் டாரிப் ரேட் நியாயமென்று கூறுகிறார். மற்றொரு கனம் அங்கத்தினர் இன்னும் கொஞ்சம் குறைத்தால் போதும் என்று சொல்கிறார். ஸ்ரீ சின்னதுரை அவர்கள் 7-லிருந்து 3 நயாபைசாவாக குறைத்துவிட்டால் நல்லது என்கிறார். இதை தீர பரிசீலனை செய்யவேண்டுமென்று நானும் நினைக்கிறேன். இதை காலாகாலத்தில் பரிசீலனை செய்ய வேண்டும். அதற்கு நல்ல பல கருத்துக்களை அங்கத்தினர்கள் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த கமிட்டி முடிவு செய்த காரணத்தினால் இதுதான் இறுதியான முடிவு. இதற்கு மாறுதல் இல்லை என்ற நிலையில்லை.

Sri Kailasanathar Temple, Velvimangalam

* 242 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) Whether there was any complaint of misappropriation of landed or movable properties of Sri Kailasanathar temple at Velvimangalam, Perambalur taluk, Tiruchirappalli district, by any of the trustees; and

(*b*) Whether, and if so, with what result the allegations were enquried into?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) The matter is being enquired into by the Deputy Commissioner.

Stones (Quartz)

*** 243 *Q.*—SRI S. M. ANNAMALAI:** கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) வடஆற்காடு மாவட்டம், வாலாஜா தாலுகா, வளையாத்தூர் கிராமத்தில் கண்ணாடி செய்வதற்கான கற்கள் கிடைத்து அதை பாரி கம்பெனியார் எடுத்துச் செல்வது சர்க்காருக்குத் தெரியுமா ?

(ஆ) அதைத் தடுத்து அந்த இடத்தில் சர்க்காரே தொழிற்சாலை நடத்தும் உத்தேசம் உண்டா ?

THE HON. SRI V. RAMAIAH : (a) Stones (quartz) available in S. No. 86 of Thamaraipakkam village of Wallajah taluk which lies at the junction of the road leading to Valayathur village is reported to be suitable for the manufacture of glass bottles and coloured glasses. Messrs. Parry and Company have not quarried these stones.

(*b*) There is no proposal at present to set up a glass factory by the Government.

17th December 1959]

SRI S. M. ANNAMALAI : அங்கே கிடைக்கிற கல்லானது கண்ணாடி செய்வதற்கு உபயோகப்படுமென்று சொல்கிறார்கள். ஆனால் பம்பாய் மாநிலத்தில் ரஷ்ய உதவியுடன் 5 கோடி ரூபாய் அளவில் ஒரு கண்ணாடி தொழிற்சாலை ஏற்பட்டுவிட்ட காரணத்தினால் நம்முடைய மாநிலத்தில் ஒரு கண்ணாடி தொழிற்சாலை ஏற்படுத்தமுடியாது என்று மத்திய சர்க்கார் மறுக்கிறார்கள் என்பது உண்மையா? அதற்கு இந்த சர்க்கார் என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டார்கள்?

THE HON. SRI V. RAMAIAH : அங்கத்தினர் அவர்கள் சொல்வது சரியல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன். நம் மாகாணத்தில் கண்ணாடி தொழிற்சாலையிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இடத்தில் கிடைக்கக்கூடிய கல்லை வைத்துக் கொண்டு ஒரு கண்ணாடி தொழிற்சாலையை, அவர்கள் சொல்வது போன்று பெரும் அளவிற்கு பணம் மூலதனம் போட்டு செய்ய முடியுமா என்பதை பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். இப்பொழுதுள்ள புள்ளிவிவரப்படி இந்தயிடத்தில் பெரிய தொழிற்சாலை ஏற்படுத்தமுடியாது என்பதைத்தான் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

Procurement of paddy and rice

* 244 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state whether the Government have cancelled all the notifications relating to price control under the scheme of procurement of rice and paddy in the State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Rice and Paddy (Madras) Price Control Order 1959 the procurement directions issued by the Commissioner of Civil Supplies to millers and merchants, the Madras Paddy (Export Control) Order, 1959, and the Madras Paddy (Transport Restrictions) Order, 1959, have been concelled.

(SRI N. K. PALANISAMI rose).

MR. SPEAKER : What supplementary question is the Hon. Member going to put?

SRI N. K. PALANISAMI : In view of the fact that Government have removed Price Control Orders either the Government have to increase the wages of all the teachers, N.G.Os. etc., or the Government have to enforce Price Control and take action against speculators and monopoly traders. Which of the two steps the Government prefer?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have already explained the position. This question, therefore, does not arise.

SRI V. SANKARAN : ஸார், இந்த பிரைஸ் கண்ட்ரோலை எடுத்த பிறகு நகரங்களில் விலைவாசிகள் குறைந்திருக்கிறது என்பது வாஸ்தவமா?